அரிசன நலத்துறையும் ஆற்றும் பணிகளும்

JAN '67

© தமிழ்நாடு அரசாங்கம்
1967

"அரிசன நல இலாக்கா" வெளியீடு.
-ஏ, மவுண்ட் ரோடு, சென்னை-2.

N67

Y5927.211
N67

113218

அரிசன நலத்துறையும் ஆற்றும் பணிகளும்

"சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

(பாரதி)

பாருக்குள்ளே நல்ல நாடான நம் பாரத நாடு சிறப்புற்றுள்ளது. புத்தர், திருவள்ளுவர், பாரதியார், காந்தியடிகள் போன்ற தவப்பெருந் தலைவர்களை ஈன்ற தவத்திரு சுதந்திர நாடாகும். அகில உலகிற்கும் அரசியல் நாகரீகத்தை எடுத்துக்கூறும் அளவிற்குத் தனக்கென ஒரு தனி அரசியல் இலக்கணத்தை வகுத்துக்கொண்ட உலக மக்கள் போற்றும் பெருமையுடைய நாடு நம் பாரத நாடு. உலக அரங்கிலேயே உன்னத இடத்தைப் பெற்று, அழியாப் புகழையும் பெற்றிருப்பதற்குத் தலையாய காரணம் அண்ணல் காந்தியடிகளின் அறவழியிலேயே தூய ஜனநாயக இலட்சியத்தை நாம் வகுத்துக் கடைப்பிடிட்பதோடல்லாமல், அகில உலக நாடுகளுக்கும் ஜனநாயக இலக்கியச் சுவடியாகவும் விளங்குவதாலேதான் என்று சொல்வது மிகையாகாது.

பண்பு மிக்க நம் நாட்டில், ஜனத்தொகையில் ஆறில் ஒரு பங்கான மக்களை (6,44,49,275) வெகு காலமாகத் "தீண்டத்தகாதவர்கள்" என்று கருதப்பட்டு வந்தது. இக்கொடும் செயலான 'தீண்டாமையை' ஒழிக்க வேண்டியது, நாட்டின் பெருமைக்கு அவசியம் என உணர்ந்து, மகாத்மா காந்தியடிகள் போன்ற நம் நட்டின் மாபெருந் தலைவர்கள், தீண்டாமையை அகற்ற வழி வகுத்தார்கள்.

தீண்டத்தகாதவர்கள் என நம் நாட்டில் ஒரு சாராரை ஒதுக்கி வைப்பது நம் பண்பிற்கும், தர்மத்திற்கும் இழுக்கு எனக் கருதினார் போலும் மகாத்மா காந்தியடிகள். இவர்களுக்கு ஒரு முக்கிய உன்னத ஸ்தானத்தை நம் சமூக மக்களிடையே கொடுக்க அவர்களை 'ஹரிஜனங்கள்' அதாவது 'கடவுளின் குழந்தைகள்' என அன்போடு அழைத்தார். அது மட்டுமல்ல, நம் நாடு சுதந்

திரம் அடைந்த பின்னர், ஹரிஜன மக்களின் சமூகம், பொருளா தாரம் மேல் நிலைகளிலிருந்து உயர்த்தப்பட, அதாவது இதர சமூக மக்களுடன் ஒருங்கே வாழ வேண்டுமென எண்ணத்துடன், நம் தேசிய சர்க்கார் பொது உரிமைகளை வழங்கத் திட்டங்கள் இயற்றப் பட்டன. கோவில்களினுள் போய் கடவுளைத் தரிசிக்க உரிமை கொடுக்கும் ஆலயப் பிரவேசச் சட்டமும், ஹரிஜனங்கள் பொது இடங் களில் உரிமையுடன் செல்லவும், பொது இடங்களிலுள்ள கிணறுகளை உபயோகிக்கவும், ஹோட்டல்களில் மற்றவர்கள் போல் நுழைந்து சாப்பிடவும், இவ்வகையான பொது உரிமைகளை வழங்கும் 'தீண் டாமை' ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. சட்டங்கள், மனமாற்றத் தின் காரணத்திற்குப் பல கருவிகளில் ஒன்றாக இருக்காலாமே தவிர, கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிகவும் பிற்போக்கான நிலையிலுள்ள ஹரிஜனங்கள் பொருளாதார வசதியையும் கல்வி யறிவையும் அவர்கள் பெற்று உயர்ந்தால், அவர்களது சமூக நிலை யும் உயர வழியாகும் என உணர்ந்து நமது அரசியல் சட்டத்தில் இவர்களுக்கென தனியான சலுகைகள் கொடுக்க நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன.

பிறர் மனமாற்றம்.—எல்லோருக்கும் சமஉரிமை வழங்க, 'ஆலயப் பிரவேசச் சட்டம்', 'தீண்டாமை ஒழிப்புச் சட்டம்' இவைகளைச் சர்க்கார் தமது கடமையாக நிறைவேற்றினாலும், நிலையான மாற்றந் அன்பின் வழியாக ஏற்பட்டால் தான் நிலையானதாகும் என்பதை உணர்ந்து, தனிப்பட்ட ஸ்தாபனங்களாகிய ஹரிஜன சேவா சங்கம், தாழ்த்தப்பட்டோர் லீக் தீண்டாமை ஒழிப்பதின் அவசியம் பற்றி பிரச் சாரகர்கள் மூலம் தீண்டாமையை ஒழிக்க ஏற்பாடு செய்தும், சர்க்கார் மாதமொருமுறை ஹரிஜன முன்னேற்றத்திற்குக் காரணமான நமது அண்ணல் காந்தியடிகள் மறைந்த 30-ம் தேதி (பிப்ரவரியில் மாதக் கடைசி நாள்) 'ஹரிஜன தின' மாகக் கொண்டாடப்படுகிறது. வருடமொரு முறை ஜனவரி மாதம் கடைசி வாரம் (24 முதல் 30 வரை) ஹரிஜன வார விழா கொண்டாடப்படுகிறது. மற்றும் பொருட் காட்சிகளில் ஹரிஜனத் துறை பங்கு கொள்கிறது. தீண்டாமையின் அவசியம் குறித்து இசை மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இசைக் குழு பிரச்சாரம் செய்து வருகிறது. இவைகளின் மூலம் 'தீண்டாமை' சிறிது சிறிதாக மனமாற்றத்தின் மூலம் ஒழிக்கப்பட்டு வருகிறது.

எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழ, தீண்டாமையை ஒழிக்க, நாலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிராமத்திலுள்ள எல்லா ஏழைகளுக்கும், ஒரே இடத்தில் குடியிருப்பு மனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

எல்லோரும் செயற்கைத் தீமையான தீண்டாமையை விரைவில் அறவே ஒழித்து, 'ஒன்றே குலம்' என்ற தத்துவத்தைச் செயலால் நிர்ம்மாணிக்க முன்வருவது மகிழ்ச்சி தருவதாகும்.

தன் நிலை மாற்றம்.—பிறர் மனம் மாற்றத்தின் மூலம் 'தீண்டாமை' ஒழிப்பதோடல்லாமல், ஹரிஜனங்களின் கல்வி, பொருளாதார முன்னேற்றத்தினாலும், தீண்டாமை அகற்ற வழி வகுக்கப்படுகிறது. கல்விக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஹரிஜனங்களுக்குப் பலவித சலுகைகள் சர்க்காரால் வழங்கப்படுகின்றன. அவைகள் பின்பு விவரிக்கப்பட்டிருக்கின்றன. கல்வியிலும், பொருளாதாரத்திலும் உயர்ந்தால், அவர்கள் சமூக நிலையும் தானாக உயர்ந்து விடும். இச்சலுகைகள் மூலம் நாட்டின் ஆளும் பொறுப்புகளில், கல்வியில் முன்னேற்றமடைந்தோர்கள், இன்று இருப்பதைக் காணலாம். ஹரிஜனங்களுக்காகச் சர்க்கார் வேலைகள் ஒதுக்கப்பட்ட 16 சதவிகிதம் மாநில சர்க்கார் உத்தியோகங்களிலும், அகில இந்தியச் சர்க்கார் பொறுப்புகளிலும், பூர்த்தி செய்ய (I.A.S., I.P.S. etc.) பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. இதைத் தவிர, இதர வேலைகளுக்கும் பயிற்சி கொடுப்பதற்கு, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரையில் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. விவசாயத்திற்காக உழவு மாடுகள், கிணறுகள் இவைகளுக்காக மான்யம் பெற்று, விவசாய முன்னேற்ற மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் முன்னேற்றமடைந்து, பொருளாதார நிலையில் உயர்ந்து வருகிறார்கள். மேலும், தொழிற் பயிற்சிகள் பெற்றும் முன்னேறி வருகிறார்கள்.

அரிசன வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக இந்த இலாகா எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைக் கீழே குறிப்பிட்ட மூன்று தலைப்புகளில் விளக்கப்படுகிறது:—

(1) கல்வி.

(2) பொருளாதார முன்னேற்றம்.

(3) சுகாதாரம், வீடு முதலியன.

கல்வி.—இத்தலைப்பின் முக்கியமான பணிகள் கீழ்வருமாறு:—

(1) பலவகையான வகுப்புகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குதல்.

(2) மாணவர்களுக்காக உணவு விடுதிகள் திறக்கப்படுவதும், நடத்துவதும்.

(3) தனியார் நடத்தும் விடுதிகளுக்கு உணவுச் செலவு மான்யம் அளித்தல்.

(4) பள்ளிக்கூடங்கள் நடத்துதல்.

(5) மாணவர்களுக்கு பகலுணவு அளித்தல்.

(6) மாணவிகளுக்கு உடைகள் அளித்தல்.

அரிசன நல இலாக்காவினால் நடத்தப்படும் அரிசனப் பள்ளிகளின் விபரங்கள் :—

மாவட்டம். (1)	பள்ளிகளின் எண்ணிக்கை. (2)	மாணவர்களின் எண்ணிக்கை. (3)
1. வட ஆர்காடு	155	19.773
2. தென் ஆற்காடு	177	20,820
3. சேலம்	10	1,798
4. தர்மபுரி	5	933
5. செங்கற்பட்டு	118	17,370
6. திருநெல்வேலி	17	1,750
7. தஞ்சாவூர்	153	15,975
8. இராமநாதபுரம்	16	2,390
9. மதுரை	21	4,127
10. நீலகிரி	4	706
11. திருச்சிராப்பள்ளி	135	21,110
12. கோயம்புத்தூர்	16	2.164
13. சென்னை	5	3,297
மொத்தம்..	832	1,12,213

குறிப்பு.—பெரும்பாலும் மாவட்டங்களில் உள்ள அரிசன மக்கள் தொகைக்கு ஏற்றவாறு பள்ளிகள், விடுதிகள் முதலியன நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



அரசினர் நந்தனார் மாணவர் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்.

விடுதிகளின் விபரங்கள்

	மாவட்டம்.	ஆண்கள் விடுதி.	மாணவர்களின் எண்ணிக்கை.	பெண்கள் விடுதி.	மாணவிகளின் எண்ணிக்கை.
	(1)	(2)	(3)	(4)	(5)
1.	வட ஆற்காடு	15	1,061	9	432
2.	தென் ஆற்காடு	22	2,205	11	925
3.	சேலம்	16	872	6	296
4.	தர்மபுரி	10	440	3	110
5.	செங்கற்பட்டு	25	1,467	7	312
6.	திருநெல்வேலி	29	1,746	16	760
7.	தஞ்சாவூர்	22	1,076	11	512
8.	இராமநாதபுரம்	41	2,845	10	742
9.	மதுரை	30	2,120	13	1,057
10.	நீலகிரி	8	530	2	195
11.	திருச்சிராப்பள்ளி	33	3,398	9	804
12.	கோயம்புத்தூர்	12	829	8	411
13.	கன்னியாகுமரி	4	225	2	85
14.	சென்னை	4	474	3	325
	மொத்தம்	271	19,288	110	6,966



அரசினர் நந்தனர் பெண்கள் விடுதி, சிதம்பரம்.

அரிசன நல இலாக்கா நிதியிலிருந்து நடத்தப்படும் தனியார் விடுதிகளின் விவரங்கள் :—

	மாவட்டம்.	ஆண்கள் விடுதி.	பெண்கள் விடுதி.	மாணவர்கள் எண்ணிக்கை.
	(1)	(2)	(3)	(4)
1.	வட ஆர்காடு	..	2*	140
2.	தென் ஆர்காடு	5	..	639
3.	சேலம்	1	..	37
4.	செங்கற்பட்டு	3	3*	789
5.	திருநெல்வேலி	5	..	330
6.	தஞ்சாவூர்	11	1	1,232
7.	இராமநாதபுரம்	4	1	444
8.	மதுரை	12	6*	1,678
9.	நீலகிரி	2	2	204
10.	திருச்சிராப்பள்ளி	2	..	147
11.	கோயம்புத்தூர்	1	2*	247
12.	சென்னை	4	2	495
	மொத்தம்.	..50	19	6,382

* Includes combined Hostels.

தொழிற் கல்வி பயிலும் அரிசன மாணவர்களுக்காக நடத்தப்படும் விடுதிகள் :—

மாவட்டம்.	விடுதியின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1. வட ஆர்காடு	1	40
2. செங்கற்பட்டு	1	40
3. தஞ்சாவூர்	1	40
4. இராமநாதபுரம்	1	25
5. மதுரை	2	118
6. நீலகிரி	1	40
7. திருச்சிராப்பள்ளி	1	55
8. கோயம்புத்தூர்	2	80
9. கன்னியாகுமரி	1	40
10. சென்னை	1	200
மொத்தம்..	12	678

கல்வி என்ற தலைப்பின் கீழ் இந்த இலாகா மூலம் செலவழிக்கப்பட்ட தொகைகள் வருமாறு :—

	(ரூ. லட்சங்களில்.)
முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ..	401·98
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்	535·42
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்..	970·76
நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ..	மூன்றாவது திட்டத்தை விட அதிகமாகச் செலவழிக்கப் படும்.

பொருளாதார முன்னேற்றம்.

இந்தத் தலைப்பின் விரிவான திட்டங்கள் வருமாறு:

1. உழவு மாடுகள், விதைகள் வாங்க முழு மானியம் கொடுத்தல்.



அரிசன விவசாயிகளுக்கு உழவுமாடுகள் இனமாக வழங்குதல்.



அரிசன விவசாயிகளுக்கு விதை நெல் வழங்குதல்.

2. நீர்ப்பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கு முழு மானியம் கொடுத்தல்.



அரிசன விவசாயிகளுக்கு நீர்ப்பாசனக்கிணறு.

திருந்திய முறையில் நெல் சாகுபடி செய்தல்.

3. அரிசனங்களுக்குப் பயிற்சி கொடுக்க பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுக் கைத்தொழில் நிலையங்கள் அமைத்தல்.

4. தொழில் செய்து வாழ்வதற்காக அரிசனத் தொழிலாளர் களுக்குத் தொழிற் கருவிகள் வழங்குதல்.

5. விவசாய நிலக்குடியேற்றச் சங்கங்கள் அமைத்தல்.

6. பால் வழங்கும் சங்கங்கள் அமைத்தல்.

ஏழை அரிசன விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக உழவு மாடுகள், விதைகள் முதலியன வாங்குவதற்கு ஒரு நபருக்கு ரூ. 400 வீதம் அளிக்கப்படுகிறது. நீர்ப்பாசனக் கிணறுகள் தோண்டுவதற்குக் கிணறு ஒன்றுக்கு ரூ. 1,500 மானியமாகக் கொடுக்கப்படுகிறது.

அரிசன விவசாயிகளுக்கு உழவுக்கருவி வழங்குதல்.

அரிசன மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்குக் கூட்டுறவுக் கைத்தொழிற் சங்கங்கள், ராஜ்யக் கதர் கிராமக் கைத்தொழில் போர்டு, தொழிற்துறை வணிக இலாகா மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரிசனப் பெண்களுக்குப் பாய் முடைவது, பொம்மை செய்வது போன்ற தொழில்களுக்கு, தொழிற் துறை வணிக இலாகா, மாதர் நல இலாகா மூலம் பயிற்சி கொடுக்கப் படுகிறது.

தொழிற் கல்வி பயின்று, தொழில் நடத்த முடியாத ஏழை அரிசனங்களுக்கு, தொழிற் கருவிகள் வழங்கும் முறை 1956-57 முதல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென ஆண்டுதோறும் சுமார் ரூ. 3 லட்சம் வரை செலவழிக்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் தையல் மெஷின், தோல் தைக்கும் மெஷின், கருமான், கொல்லன் கருவிகள் முதலியன வழங்கப்படுகின்றன.



அரிசனங்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் தொழிற்கருவிகள்.

சாகுபடிக்கேற்ற நிலங்கள் தேவையான அளவில் கிடைக்கும் இடங்களில் நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப் படுகின்றன. தற்சமயம் 57 சங்கங்கள் உள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் பல சங்கங்களை அமைப்பதற்கும், ஏற்கனவே உள்ள சங்கங்களைப் பராமரிப்பதற்காகவும் மாகாண கூட்டுறவுப் பதிவாளர் வசம் நடப்பு ஆண்டிற்கு ரூ. 3 லட்சம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



அரிசனங்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் தொழிற்கருவிகள்.

அரிசனங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகப் பால் வழங்கும் சங்கங்கள் மாநில முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 207 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் சில சங்கங்களை அமைப்பதற்கு மான்யத் தொகையாக ரூ. 3 லட்சம், சென்னை பால் அபிவிருத்தி இயக்குனர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார முன்னேற்றம் என்ற தலைப்பின்கீழ் இந்த இலாக்கா மூலம் செலவழிக்கப்படும் தொகை விபரம் வருமாறு :—

		(ரூ. லட்சங்களில்)
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்	..	100·14
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்	..	86.66
நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்	..	மூன்றாவது திட்டக் காலச் செலவை விட அதிகம் செலவழிக்கப்படும்.

சுகாதாரம், வீடு கட்டுதல் போன்ற திட்டங்கள்.

(1) **வீட்டு மனை வழங்குதல்.**—வீட்டு மனைகள் அரிஜனங்களுக்கும், மற்றும் கிராமத்திலுள்ள எல்லா ஏழைகளுக்கும் நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழங்க நடவடிக்கையிலிருக்கிறது. எல்லோரும் ஒரு இடத்திலிருப்பது மூலம் தீண்டாமையும் ஒழியும்.

(2) குடிநீர்க் கிணறுகள் அமைத்தல்.

(3) அரிசனக் காலனிகளுக்கு மின்வசதி ஏற்படுத்துதல்.

(4) சமுதாய மன்றம் அமைத்தல்.

(5) அழகாகவும், துப்புரவாகவும் உள்ள அரிசனக் குடியிருப்புகளுக்குப் பரிசளித்தல்.

(6) பஞ்சாயத்து எடுத்துக்கொண்ட வேலைகளுக்கு (அரிசன மக்களின் சார்பில்) ஒரு பகுதிக்கு மான்யம் கொடுத்தல்.

(7) குடிநீர்க் கிணறுகளைச் செப்பனிடுதல், பாதைகள் அமைத்தல், இடுகாடுகள் அமைத்தல் முதலியன.

(8) வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

(9) நகரசபைகள், பஞ்சாயத்துக்கள் முதலியவற்றிற்குத் தள்ளு வண்டிகள் வழங்குதல்.

(10) நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தல்.

இவைகளுக்காக இந்த இலாக்கா மூலம், மூன்றாவது திட்டத்தில் ரூ. 31·04 லட்சங்கள் செலவழிக்கப்பட்டன. நான்காவது திட்டத்தில் கணிசமான அளவில் செலவழிக்கப்படும்.

இந்த இலாக்கா மூலம், நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வீடில்லாத ஏழை அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முதல் 30—6—1966 முடிய 1,30,963 மனைகள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 1,15,261 மனைகள் வழங்கப்பட்டுள்ளன. சுகாதார முறைப்படி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அரிசனக் காலனிகளுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து தரப்படுகிறது. அரிசனக் காலனிகளுக்கு மின்சார வசதி செய்து தரப்படுகிறது.

சமூகப் பழக்க வழக்கங்களை அறிவுறுத்த 25 சமூதாய மன்றங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கே அரிசனக் குழந்தைகளுக்குப் பகலுணவு, பால் முதலியன வழங்கப்படுகின்றன. இங்கு குழந்தைகள் விளையாடுவதற்கு விளையாட்டுக் கருவிகளும் உள்ளன. தீண்டாமையை ஒழிப்பதற்கு இந்த மன்றங்கள், நாடகங்களும், பஜனைகளும் நடத்துவதற்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. முதலுதவி சாதனங்களும் இங்கே வைக்கப்பட்டுள்ளன.

சமுதாய இல்லம் (Community Hall)

பஞ்சாயத்து யூனியன்கள், இராம வேலை திட்டத்தின் கீழ் அரிசனங்களுக்காக எடுத்துக்கொண்ட வேலைகளுக்காகச் செலவழிக்கப்படும் தொகையில் 20 சதவீதச் செலவை இந்த இலாக்கா ஏற்றுக்கொள்கிறது.

ஏழை அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 113·08 லட்சங்களும், மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 39·58 லட்சங்களும் செலவழிக்கப் பட்டது. நான்காவது திட்டக் காலத்தில் அதிகமாகச் செலவழிக்கப் படும்.

அரிசன நலத்துறை முக்கிய பணிகளில் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு மத்திய அரசாங்க முழு மான்யத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டின் மதிப்பு ரூ. 1,500. இதில் ரூ. 750 அரசாங்க மான்யமாகக் கொடுக்கப் படுகிறது. மீதி ரூ. 750 ஸ்தல ஸ்தாபனங்கள் ஈடு செய்கின்றன.

Y5927-211
N67

அரிசனங்களுக்கு குடியிருப்பு வசதி

நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு, மலத்தைத் தலைகளில் தூக்கிச் செல்லும் வழக்கத்தை ஒழிப்பதற்காக, நகரசபைகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் தள்ளுவண்டிகள் வழங்கப்படுகின்றன.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காக மாவட்டவாரியாக இசைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இலாக்கா மூலம் அரிசனங்களுக்காக எல்லா திட்டங்களுக்கும் செலவழிக்கப்படும் விரிவான விபரங்கள்:—(நிர்வாகச் செலவு தவிர.)

முதல் ஐந்தாண்டுத் திட்டம் சுமார் ரூ. 5 கோடி.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் சுமார் ரூ. 9 கோடி.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் சுமார் ரூ. 14 கோடி.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மூன்றாவது திட்டத்தைவிட அதிகம் செலவழிக்கப்படும்.

113218

ஆதிவாசிகள்.

சென்னை மாகாணத்தில் சுமார் ஆதிவாசிகள் 2,51,000 என 1961-ல் கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் காடுகளிலும் மலைகளிலும் வசிக்கிறார்கள். இவர்கள் சமுதாயத்தின்

பல்வேறு துறைகளிலும் மிகவும் பின்தங்கியுள்ளனர். மலையிலே வாழ்பவர் என்று குறிப்பிடும்போது, அவர்கள் கல்வி வளர்ச்சியிலே பொருளாதார நிலையிலே, மற்றும் சமுதாய நிலையிலே எவ்வாறிருப்பர் எனக் கூறத் தேவையில்லை. அவ்வளவு ஏழ்மையிலிருக்கிற அவர்களை முன்னேற்றுவது தலையாயக கடன் என்பதை உணர்ந்து மேற்கண்ட வகைகளிலே திட்டமிட்டு இந்த அரிசன நல இலாகா பணி புரிகிறது.

கல்வி.—ஆதிவாசி சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும் கல்வி வளர்ச்சியின் பொருட்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 12 உறைவிடப் பள்ளிகளும், 2 உணவு உறைவிட விடுதிகளும் ரூ. 83,700 செலவில் அமைக்கப்பட்டன. மற்றும் 600 ஆதிவாசி மாணவர்கள் பயன் பெறுகிற முறையில் தனியார் உணவு விடுதிகளுக்கும் உணவு மான்யம் கொடுக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3,600 மாணவர்கள் பயன் பெறும் வகையில் 34 உறைவிடப் பள்ளிகளும், 6 உணவு விடுதிகளும், 5 தனியார் உணவு விடுதிகளும் நடத்துவதற்காக ரூ. 13,68,000 செலவிடப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத திட்டக் காலத்தில் 20-ம் ஆக மொத்தம் 54 உறைவிடப் பள்ளிகள் மேலே காணும் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆதிவாசிகள் பெண்கள் விடுதி, நீலகிரி.

எண்.	மாவட்டம்.	உறைவிடப் பள்ளியின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை.	விடுதிகளின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை
1.	வட ஆற்காடு	2	100	2	75
2.	சேலம்	7	420	2	90
3.	கோயம்புத்தூர்	11	513	2	115
4.	நீலகிரி	18	1,061	..	..
5.	மதுரை	2	80	3	160
6.	திருச்சிராப்பள்ளி	9	380	4	135
7.	செங்கற்பட்டு	..	..	2	110
8.	திருநெல்வேலி	1	66	..	..
9.	இராமநாதபுரம்	1	20	..	..
10.	தென் ஆற்காடு	1	100	1	50
11.	கன்னியாகுமரி	2	135	..	..
	மொத்தம் ..	54	2,875	16	735

கல்வி நிலையை மேலும் ஊக்குவிப்பதற்காக 25 ஆதிவாசி மாணவர்களுக்கு ஒரு உபாத்தியாயர் வீதம் நியமனம் செய்ய நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

உபகாரச் சம்பளம்.— ஆதிவாசிகளுக்கும் அரிசன நலத் துறை யால் அளிக்கப்படும் உபகாரச் சம்பளங்கள் அரிசன மாணவர் களுக்கு அளிக்கப்படுவதைப் போன்றே முதல் வகுப்பிலிருந்து உயர் படிப்பு முடியும்வரை உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன.

விவசாயம்.— இவர்களில் பலர் விவசாயம் செய்து பிழைக் கின்றனர். அவர்களின் வாழ்வு வளம் பெற உழவு மாடுகள், உழவுக் கருவிகள் முதலியன இலவசமாக வழங்கப்படுகின்றன. நீர்ப்பாசனக் கிணறுகளுக்காக மான்யமும் வழங்கப்படுகிறது.

இந்தத் தலைப்பின்கீழ் செலவழிக்கப்பட்ட விவரங்கள் வருமாறு:—

முதல் திட்டக் காலத்தில்	..	0.30	லட்சம்
இரண்டாவது திட்டக் காலத்தில்	..	4.89	,,
மூன்றாவது திட்டக் காலத்தில்	..	7.83	,,

நான்காவது திட்டத்தில் செலவு, மூன்றாவது திட்டத்தைவிட அதிகரிக்கப்படும்.

கைத்தொழில் வளர்ச்சி.—ஆதிவாசிகளின் தொழிற் துறையிலே முன்னேற்றும் வகையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் 16 தொழில் நிறுவனங்களும், 6 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்க ரூ. 3,24,000 செலவிடப்பட்டது. மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 5,88,000 செலவழிக்கப்பட்டன. நான்காவது திட்டத்தில் அதிகம் செலவழிக்கப்படும்.

சுகாதார வளர்ச்சி.— முதல் திட்டக் காலத்தில் 10 குடிநீர்க் கிணறுகள் வெட்ட ரூ. 7,000 செலவிடப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 225 குடிநீர்க் கிணறுகள் வெட்ட ரூ. 4,49,000 செலவிடப்பட்டது. மலேரியா முதலிய நோய்களைத் தடுத்து, அவர்களுக்கு மருத்துவ வசதியளிக்க சுகாதார அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதோடு மோட்டார் வாகனங்களில் சென்றும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

குடியிருப்பு வசதிகள்.— ஆதிவாசிகள் அனைவருமே குடிசைகளில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் வாழ்வு வளம் பெற நல்ல வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. இதற்காக முதல் திட்டத்



ஆதிவாசிகளுக்கு குடியிருப்பு வசதி, நெடுகல்கோம்பை—நீலகிரி.

தில் ரூ 8,000-மும், இரண்டாவது திட்டக் காலத்தில் 1,190 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 12·48 லட்சமும் செலவழிக்கப்பட்டன. மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 10·45 லட்சங்கள் செலவழிக்கப்பட்டன. நான்காவது திட்டத்தில் சுமார் 1,000 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 15 லட்சம் உத்தேசமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவைகளைத் தவிர ஆதிவாசிகளின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு வசதிகளடங்கிய ஆதிவாசிகளின் வளர்ச்சித் தொகுதிகள் (Tribal Development Blocks) இரண்டு, கொல்லிமலைப் பகுதியில் ஒன்றும், ஏர்க்காடு மலைப்பகுதியில் ஒன்றும் இயங்குகின்றன.

உத்தியோக சம்பந்தப்பட்ட வகையில், இவர்களது தேவைகள் அரிசனங்களுடன் சேர்ந்தே கவனிக்கப்படுகிறது. இதற்கென வகுக்கப்பட்ட திட்டங்கள் இவர்களுக்கும் பயன்படுகிறது.

நான்காவது திட்டத்தின் கீழ் ஆதிவாசிகளின் முன்னேற்றத்திற்கு அதிகப்படியாகச் செலவழிக்கப்படும்.

பதிவு நீக்கப்பட்ட வகுப்பினர்.

குற்றப் பரம்பரையினர் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டு இருந்த இவர்கள் பாரதம் சுதந்திரமடைந்தபின், இவர்களது பழக்க வழக்கங்கள் நல்ல முறையில் இருந்தமையால், பதிவு முறை ரத்து செய்யப்பட்டு, பட்டியலிலிருந்து இவர்கள் நீக்கப்பட்டது மாத்திரமன்றி இவர்களுக்கிருந்த "குற்றப் பரம்பரையினர்" என்ற இழிவான பெயரும் நீக்கப்பட்டு, 1960-ம் ஆண்டிலிருந்து "பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள்" என்று குறிக்கப்பட்டது. இவர்கள் பெரும்பாலும் மதுரை மாவட்டத்தில் அதிகமாக இருப்பதால் இவர்களின் முன்னேற்றத்திற்காக மதுரையில் "கள்ளர் சீரமைப்புத் துறை" என்ற ஓர் தனி அலுவலகம் இந்த அரிசன நலத்துறையின் கீழ் இயங்கி வருகிறது. இப்படி அவர்களுக்கென ஒரு தனித் துறை அமைத்து, அவர்கள் மேலும் முன்னேற்றமடைய வழி வகை செய்யும் பொருட்டு பல திட்டங்கள் தீட்டி ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் செயலாற்றி வரப்படுகின்றன. கல்வி, பொருளாதாரம் ஆகியவைகளில் இவர்கள் முன்னேற தனிக் கவனம் செலுத்தப்படுகின்றது.

கல்வி.—இவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக முதல் திட்டக் காலத்தில் 256 பள்ளிகளும், 19 உணவு விடுதிகளும் ரூ. 43.55 லட்சம் செலவில் நடத்தப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் இத்தகைய திட்டங்களுக்காக ரூ. 89.04 லட்சங்கள் செலவிடப்பட்டது. மூன்றுவது திட்டக் காலத்தில் ரூ. 93·15 செலவிடப்பட்டது.



அரசினர் உயர்நிலைப் பள்ளி, செக்கானூரணி—மதுரை மாவட்டம்.

இவர்களுக்காகத் தற்போது நடத்தப்படும் பள்ளிகள், விடுதிகளின் விவரங்கள் வருமாறு:—

எண்.	மாவட்டம்.	பள்ளிகளின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை.	விடுதிகளின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	வட ஆற்காடு	4	354	..	..
2.	தென்னாற்காடு	1	453	..	..
3.	சேலம்	2	367	2	160
4.	தர்மபுரி	1	111	..	..
5.	இராமநாதபுரம்	7	1,134	7	525

எண்.	மாவட்டம்.	பள்ளிகளின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை.	விடுதிகளின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
6.	மதுரை (கள்ளர் சீரமைப்புத் துறை)	241	32,808	14	2,050
7.	திருநெல்வேலி	10	890	8	560
8.	செங்கற்பட்டு	..	..	2	180
9.	திருச்சிராப்பள்ளி	..	..	4	174
10.	மதுரை (மாவட்ட நல அலுவலகம்).	..	..	1	45
	மொத்தம்	266	36,057	38	3,694



பதிவு நீக்கப்பட்ட வகுப்பினருக்கு அரசினர் உணவு விடுதி, உத்தமபாளையம் (மதுரை).



பதிவு நீக்கப்பட்ட வகுப்பினர் நலப் பள்ளி, சேலம் மாவட்டம்

உபகாரச் சம்பளம்.—அரிசன நலத்துறையால் அளிக்கப்படும் மாநில உபகாரச் சம்பளங்கள். உரிமையுள்ள வகுப்பினருக்கு அளிக்கப்படுவதைப் போன்றே அளிக்கப்படுகின்றது. உரிமையுள்ள வகுப்பினரைப் போன்றே முதல் வகுப்பிலிருந்து. அம்மாணவன் படிப்பு முடியும்வரை உபகாரச் சம்பளங்கள் அளிப்பதின் விதிகளின்படி அளிக்கப்படுகின்றது. உபகாரச் சம்பள விஷயத்தில் இவர்கள் "இதர உரிமையுள்ள வகுப்பினர்" என அனுமதிக்கப் படுகின்றனர்.

விவசாயம்.—இவர்கள் விவசாயம் செய்வதில் அக்கறை உள்ளவர்கள் இவர்களை விவசாயத்தில் ஊக்குவிப்பதற்காக இவர்களுக்கு உழவு மாடுகள் வாங்க, நபர் ஒன்றுக்கு ரூ. 400 மான்யமாகவும், பாசனக் கிணறுகள் தோண்ட பாதி கடனும், பாதி மான்யமுமாக ரூ. 1,500 நபர் ஒன்றுக்கு வழங்கப்படுகின்றது. ரூ. 1,500-ம் முழு மான்யமாகவே வழங்க அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

கூட்டுறவு முறையில் கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், கைத்தொழிற் பயிற்சி நிலையங்களும், இவர்களைத் தொழில் துறையில் முன்னேறச் செய்ய நடத்தப்பட்டு வருகின்றன.



நீர்ப்பாசனக் கிணறு

	திட்ட விவரங்கள் (தொகை லட்சத்தில்).		
	முதல் திட்டக் காலம்.	இரண்டாவது திட்டக் காலம்.	மூன்றாவது திட்டக் காலம்.
(1)	(2)	(3)	(4)
1. உழவு மாடுகள்	0·43	32·87	15·12 (1 and 2)
2. பாசனக் கிணறுகள்	..	..	
3. கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.	0·04	6·21	12·17 (3 and 4)
4. பொது எஞ்ஜினியரிங் ஒர்க் ஷாப்.	..	..	

வீடுகள்.—இவர்களுக்கு முதல் திட்டக் காலத்தில் வீடுகள் கட்டுவதற்காக ரூ. 70,000 செலவிடப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 17·10 லட்சம் செலவிடப்பட்டது. மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 21·30 லட்சங்கள் செலவழிக்கப்பட்டன

இவர்களுக்கென செங்கற்பட்டு மாவட்டத்தில் பம்மல் செட்டில் மெண்டும், தென்னற்காடு மாவட்டத்திலுள்ள அஜீஸ் நகர் செட்டில்மெண்டும், சென்னையில் பிரிஸ்லி நகர் செட்டில்மெண்டும் இந்த இலாக்காவின் நிர்வாகத்தில் உள்ளன.



பதிவு நீக்கப்பட்ட வகுப்பினருக்கு குடியிருப்பு வசதி—மதுரை மாவட்டம்.

இதர பின்னிலை வகுப்பினர்

கல்வி.—பலர் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருப்பதற்குக் காரணம், பெரும்பாலும் அவர்கள் பொருளாதாரத் துறையில் பின்தங்கியிருப்பதே முக்கிய காரணமாகும்.

தனியார் நடத்தும் உணவு விடுதிகளைச் சிறிது சிறிதாகச் சர்க்காரே எடுத்து நடத்த 1956–57 முதல் முற்பட்டனர். அதன்படி திறக்கப்பட்ட அரசாங்க விடுதிகளில் பின்தங்கியவர்கள் கணிசமான அளவில் சேர்க்கப்படுகின்றனர். அரிசனங்களுக்கெனத் திறக்கப்பட்ட விடுதிகளில் 15 சதவீதமும், இவர்களுக்கெனத் திறக்கப்பட்ட விடுதிகளில் 65 சத வீதமு மாகச் சேர்க்கப்படுகின்றனர்.

தனியார் நடத்தும் விடுதிகளுக்குக் கொடுக்கப்படும் மானியம், இதனால் வருடாவருடம் குறைந்துகொண்டே வருகிறது.

உபகாரச் சம்பளம்.—உபகாரச் சம்பளங்களில் எண்ணிக்கையும், செலவும் கிரமமாக வருடாவருடம் உயர்ந்துகொண்டே செல்கிறது.

வருடம்.	எண்ணிக்கை	செலவு. ரூ. (லட்சத்தில்)
(1)	(2)	(3)
1948–49 திட்டம் துவக்கப்பட்டது	609	1·00
1950–51	3,070	5·33
1951–52	3,325	8·01
1952–53	3,981	9·38
1956–57	7,046	14·71
1957–58	7,930	19·17
1958–59	8,251	19·22
1959–60	15,431	28·46
1964–65	31,332	70·78
1965–66	31,375	73·04

தொழில்வளம்.—சென்ற ஆண்டு வரை, சலவைத் தொழிலாளிகளுக்கும், சவரத் தொழிலாளிகளுக்கும் முறையே ரூ. 50-ம், ரூ. 53-ம் பெறுமானமுள்ள தொழிற் கருவிகள் வாங்கி, வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு

(1966–67) முதல் சவரத் தொழிலாளிகளுக்கு ரூ. 53 பெறுமான முள்ள தொழிற்கருவிகளும், சலவைத் தொழிலாளிகளுக்கு ரூ. 110 பெறுமானமுள்ள தொழிற் கருவிகளும் இனாமாகவே வழங்கப் படுகின்றன. இதற்காக நடப்பு ஆண்டில் ரூ. 1,27,100 ஒதுக்கப் பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு நார் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றும், பூதபாண்டியில் பிரம்புத் தொழிற் பயிற்சி நிலையமும் பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்காக நடத்தப்படுகின்றன. தென்னாற்காடு மாவட்டத்தில் 4 பாறைகள் உடைக்கும் நிலையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

வீட்டு மனை வழங்கல்.—சோஷலிச சமுதாய நோக்கத்துடன் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் குறிக் கோளுடன் முதல் கட்டமாக வீடு கட்ட நிலம், நிலமில்லா ஏழை மக்களுக்கு சாதி மத பேதமின்றி அரசினர் செலவில் நிலம் வாங்கி, இலவசமாக அளிக்கப்படுகிறது. இதற்காக இவ்வாண்டு ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பின்னிலை வகுப்பினரின் முன்னேற்றத்திற்கென நான்காவது திட்டத்தில் அதிகப்படியான தொகைகள் ஒதுக்கப்படும்.

பொது (General)

அரிசனங்களின் முன்னேற்ற திட்டங்களை நல்வழியிலும் துரித மாகவும் செவ்வனே செய்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அரிசன நலக் குழு ஒன்று இயங்கி வருகிறது. அந்தக் குழுவிற்கு மாவட்டக் கலெக்டர் தலைவராகப் பணிபுரிகிறார். இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி அங்கத்தினர்கள் கொண்டுவரும் திட்டங்களையும் தீர்மானங்களையும் விவாதித்து மாவட்ட நல அதிகாரிகள் செயல்படுத்துகிறார்கள்.

இதேபோல் நீலகிரியில் மாவட்ட ஆதிவாசி நலக் குழு ஒன்று இயங்குகிறது. நீலகிரி மாவட்டக் கலெக்டர் தலைவராக உள்ளார்.

மாநில ரீதியில் தமிழ்நாடு அரிசன நல ஆலோசனைக் குழு ஒன்று உள்துறை அமைச்சர் தலைவராகவும், அரிசன நல இலாக்கா இயக்குனர் செயலாளராகவும் கொண்டு இயங்கி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அரிசனங்களின் முன்னேற்றத்தில் அக்கறை

கொண்டவர்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து குழுவில் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த ஆலோசனைக் குழு நான்கு மாதத்திற்கு ஒரு தடவை கூடி இந்த இலாக்கா செய்யும் திட்டங்களைப் பற்றியும், புதிய திட்டங்கள் பற்றியும் விவாதிக்கிறார்கள். அங்கத்தினர்கள் கூறும் திட்டங்களையும் ஆலோசனைகளையும் பரிசீலித்து இந்த இலாக்கா செயல்படுகிறது.

இதுபோல் ஆதிவாசிகளின் நலனுக்காகத் தமிழ்நாடு மலை சாதியினர் ஆலோசனைக் குழு ஒன்றும் இயங்கி வருகிறது. இக்குழுவிற்கும் உள்துறை அமைச்சர் தலைவராகவும், அரிசன நல இலாக்கா இயக்குனர் செயலாளராகவும் உள்ளனர். ஆதிவாசிகளின் பிரதிநிதிகள் இக் குழுவில் அங்கத்தினர்களாக உள்ளனர். அங்கத்தினர்கள் ஆதிவாசிகளின் நலனுக்காகக் கொண்டுவரும் திட்டங்களையும் தீர்மானங்களையும் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை ஆலோசனைக் குழுக் கூட்டம் கூட்டி, விவாதித்து இந்த இலாக்கா செயல்படுகிறது.

மற்றும், பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்காக, பிற்பட்ட வகுப்பினர் மாநில ஆலோசனைக் குழு ஒன்றும் உள்ளது. இக் குழுவிற்கும் உள்துறை அமைச்சர் தலைவராகவும், அரிசன நல இயக்குனர் செயலாளராகவும் உள்ளனர். மாவட்டவாரியாக அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆலோசனைக் குழுக் கூட்டம் நான்கு மாதத்திற்கு ஒரு முறை கூடி அங்கத்தினர்கள் பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்காகக் கொண்டுவரப்படும் திட்டங்களையும் தீர்மானங்களையும் விவாதித்து இந்த இலாக்கா செயல்படுகிறது.

இந்த இலாக்கா மூலம் முதல் திட்டக் கால முதல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிய எல்லா இனத்தினருக்கும் பலவித திட்டங்களுக்காக செலவழிக்கப்பட்ட தொகை பின்வருமாறு :—

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலம்	சுமார்	ரூ.	6 கோடி.
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்	,,	ரூ.	13 ,,
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்	,,	ரூ.	21 ,,
1965—66-ல் செலவழிக்கப்பட்ட தொகை		ரூ.	5·38 ,,
1966—67 எதிர்பார்க்கப்படும் செலவு		ரூ.	6·14 ,,

113218

ப. சங்கரன்,
அரிசன நலத்துறை இயக்குனர்.

தமிழ்நாடு அரசாங்கத்திற்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத் தொழில் கட்டுப்பாட்டு
அதிகாரியால் பதிப்பிக்கப்பெற்றது.